## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 13/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆந்திராதேவி | மதம் | : இந்து |
| த/பெ | : கோபிநாதன் | ஜாதி | : BC |
| வயது | : 72 | கிராமம் | : அமிர்த்தாபுரம் (கொரட்டூர்) |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**24.09.2024**

**பி.வா.சா. 1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 30.01.2012ம் தேதியிட்டு நான் என் மகனுக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 02.05.2012ம் தேதியிட்டு என் மகன் பெயருக்கு பட்டா எண்.37ல் கொடுக்கப்பட்ட பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 02.09.2024ம் தேதியிட்ட தாவா சொத்துக்கான சிட்டா சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(சிட்டா பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 10.01.2012ம் தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 12.03.2014ம் தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது வாக்காளர் அடையாள அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **(வாக்காளர் அடையாள அட்டை பி.வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் கணவரின் வாக்காளர் அடையாள அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **( வாக்காளர் அடையாள அட்டை பி.வா.சா.ஆ 7 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது)**

3. காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி கணக்கு புத்தகம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கணக்கு புத்தகம் பி.வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்துக்கான வில்லங்க சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று பி.வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** குடும்ப அட்டை புகைப்பட நகல் தாக்கல் செய்கிறேன். அசல் குடும்ப அட்டையை உணவு பாதுகாப்பு துறையிடம் ஒப்படைத்துவிட்டேன். **(குடும்ப அட்டை பி.வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 09.11.2011 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(அறிவிப்பு பி.வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)